நாளை 10ம் வகுப்பு தேர்வு முடிவுகள்

சென்னை, ஜூன் 16: தமிழகத்தில் கடந்த மாதம் 6ம் தேதி முதல் 30ம் தேதி வரை பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு நடந்தது. இந்த தேர்வை 9 லட்சத்து 55 ஆயிரம் பேர் எழுதினர். தேர்வு முடிந்த பிறகு விடைத்தாள் திருத்தும் பணி தமிழகத்தில் 140 மையங்களில் ஜூன் 1ம் தேதி முதல் 9ம் தேதி வரை நடந்தது. விடைத்தாள் திருத்திய பிறகு மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை தேர்வுத்துறை கணினியில் பதிவேற்றும் பணிகள் முடிந்து தற்போது மதிப்பெண் பட்டியல்கள் அச்சடித்து முடிக்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் ஜூன் 17ம் தேதி வெளியிடப்படும் என்று ஏற்கனவே தேர்வுத்துறை அறிவித்துள்ளபடி, நாளை பத்தாம் வகுப்பு தேர்வு முடிவு வெளியாக உள்ளது.

நாளை காலை 10 மணி அளவில் http://www.dge.tn.gov.in என்ற இணைய தளத்தில் தேர்வுத்துறை வெளியிடுகிறது. இதுதொடர்பான அறிவிப்பு தேர்வுத்துறையின் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் செல்போன்கள் மூலம் அறிவிக்கப்படும். பின்னர் மதிப்பெண்களுடன் கூடிய முடிவுகளும் அனுப்பி வைக்கப்படும். இதையடுத்து, தற்காலிக மதிப்பெண் பட்டியல்கள் இணைய தளம் மூலம் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கவும் தேர்வுத்துறை ஏற்பாடு செய்துள்ளது. இந்த கல்விஆண்டில் பிளஸ் 1 வகுப்புகள் 27ம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், விரைவில் பிளஸ் 1 வகுப்பில் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

குடும்பத்தலைவிகளுக்கு

வெகு விரைவில் ₹1,000 ஊக்கத்தொகை

நிதியமைச்சர் பிடிஆர்.பழனிவேல் தியாகராஜன் தகவல்

மதுரை, ஜூன் 16: குடும்பத்தலைவிகளுக்கு விரைவில் ரூ.1,000 ஊக்கத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என நிதியமைச்சர் பிடிஆர். பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

மதுரை, மகபூப்பாளையத்தில் உள்ள உள்ள மத்திய தொகுதி சட்டமன்ற அலுவலகத்தில் நிதியமைச்சர் பிடிஆர்.பழனிவேல் தியாகராஜன், பொதுமக்களிடம் நேற்று கோரிக்கை மனுக்களை பெற்றார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: புதிய நிறுவனங்கள் (ஸ்டார்ட் அப்) தயாரித்த பொருட்களை அரசுத்துறையில் வாங்கி பயன்படுத்துவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஆலோசனை செய்யப்பட்டது. அவரும் ஒப்புதல் அளித்துள்ளார். இந்த நிறுவனங்களிடம் கொள்முதல் செய்வதால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். தமிழக பொருளாதாரம் மேலும் வளர்ச்சி அடைய வாய்ப்பு ஏற்படும். வெளிநாட்டு நிறுவனங்களை ஈர்க்கவும், தமிழகத்தில் இல்லாத புதிய வெளிநாட்டு நிறுவனங்களை இங்கு கொண்டு வரும் வகையிலும், அமெரிக்காவில் அரசு அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதுபோல ஆஸ்திரேலியாவிற்கும், தமிழகத்திற்கும் வர்த்தகம் வளர்க்கவும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இல்லம் தேடி மருத்துவம், கல்வி திட்டங்களைப் போல வீடு தேடி ரேஷன் கார்டு, ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியமும் வருவதற்காக தபால்துறையுடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. திமுக தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த குடும்பத்தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை விரைவில் வழங்கப்படும். இதற்காக குடும்பத்தலைவிகள் குறித்த புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முதல்வருடன் மாநில கல்விக்கொள்கை குழு சந்திப்பு

▶ சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று, மாநில கல்விக் கொள்கை குழுவின் தலைவர் டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி முருகேசன், உறுப்பினர்கள் ஜவஹர்நேசன், ராமானுஜம், சுல்தான் இஸ்மாயில், ராம சீனுவாசன், அருணா ரத்னம், ராமகிருஷ்ணன், துளசிதாஸ், மாடசாமி, பாலு, ஜெயஸ்ரீ தாமோதரன் சந்தித்து பேசினர். அருகில், பள்ளி கல்வித்துறை செயலாளர் காகர்லா உஷா, உயர் கல்வித்துறை செயலாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட அதிகாரிகள்.

மாநில கல்விக்கொள்கை குறித்த ஆய்வுக்குழு முதல்வருடன் சந்திப்பு

சென்னை, ஜூன் 16: மாநில கல்விக் கொள்கை குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட நீதிபதி முருகேசன் தலைமையிலான குழு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சந்தித்தது.

ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள புதிய கல்விக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அம்சங்கள் மாநிலங்களின் கல்வி மற்றும் உரிமைகளில் தலையிடுவதாக உள்ளது என்று பல மாநிலங்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இதை தமிழக அரசும் ஏற்கவில்லை.

இந்நிலையில், மாநில கல்விக் கொள்கையை வகுக்கப் போவதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். மேலும், அதுகுறித்து ஆய்வு செய்து கொள்கைகளை வகுக்க வல்லுநர் குழு ஒன்றையும் அறிவித்தார். நீதிபதி முருகேசன் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த குழுவில் பேராசிரியர் ஜவகர்நேசன், ராமானுஜன், சுல்தான் இஸ்மாயில், முனைவர் அருணா ரத்தினம், எழுத்தாளர் ராமகிருஷ்ணன், செஸ் சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த், இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா, கல்வியாளர் துளசிதாசன், கல்வியியல் எழுத்தாளர் மாடசாமி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பாலு, அகரம் அறக்கட்டளையின் தலைவர் ஜெயஸ்ரீதாமோதரன் இடம்பெற்றுள்ளனர். இந்த குழுவின் உறுப்பினர் செயலராக மெட்ரிக்குலேஷன் இயக்குனர் கருப்பசாமி நியமிக்கப்பட்டுள்ளார். இந்த குழுவினர், முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து அவரது அறிவுரைகளை கேட்டனர். அதற்கு பிறகு ஆலோசனை நடத்தப்பட்டது.

பின்னர் குழுவின் தலைவர் நீதிபதி முருகேசன் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தின் வரலாற்று மரபு, அதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள், மாநிலத்துக்கான கல்விக் கொள்கை அமைப்பதில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதன்படி தமிழகத்துக்கான மாநில கல்விக் கொள்கையை வகுப்பதற்கு முன்னதாக பெற்றோர், மாணவர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், கல்வி நிறுவனங்கள் உள்பட பொதுமக்கள் தரப்பில் இருந்து கருத்துகள் கேட்கவும், எதிர்கால இளைஞர்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு கல்விக் கொள்கையை வடிவமைக்க வேண்டும் என்று முதல்வர் தெரிவித்துள்ளதால், அது தொடர்பாக இந்த குழு இன்று ஆலோசனை நடத்தியது.

அத்துடன் கல்விக் கொள்கையின் முக்கிய அம்சமாக இருக்க வேண்டியது என்னவென்றால், தமிழகத்தின் கல்வித் தரம் என்பது உலக அளவில் உள்ள தேவையை பூர்த்தி செய்யும் வகையில் எதிர்கால இளைஞர்களின் முன்னேற்றத்துக்கான கல்வியாகவும் தொழில்நுட்பம் போன்றவற்றை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். அதே நேரத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் கல்வியாகவும் அது அமையும் வகையில் வடிவமைக்கப்படும். தேர்வு முறைகளில் திருத்தங்கள் கொண்டு வரவும், மேனிலைக் கல்வி முடித்தவர்கள் உயர்கல்வியில் விட்டுவிடாமல் தொடர்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் அமையும். மாநில கல்விக் கொள்கையை வடிவமைக்க ஒரு ஆண்டு காலம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் இந்த கொள்கை தயாரித்து அரசிடம் வழங்கப்படும். இவ்வாறு நீதிபதி முருகேசன் தெரிவித்தார்.

மாணவிகளுக்கு ₹1000 உயர் கல்வி உதவிதொகை வழங்க ஏற்பாடு தயார்

அமைச்சர் கீதாஜீவன் தகவல்

சென்னை, ஜூன் 16: முதியோருக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவியரிடையே, கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி எடுத்தல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி சென்னை அசோக் நகர் பெண்கள் மேனிலைப் பள்ளியில் நேற்று நடந்தது. இதில், சமூக நலத்துறை அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்றார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

முதியோரை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அவர்களுக்காக தனிக்கொள்கை வடிவமைக்கப்பட்டு வருகிறது. விரைவில் அது வெளியிடப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் முதியோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதால் தொலைநோக்குடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதியோர் இல்லங்களே கூடாது என்பதே அரசின் எண்ணம். ஆனால் சூழல் அப்படி இல்லை. தனியாக இருப்பது முதியோருக்கு பாதுகாப்பில்லை என்பதால் முதியோர் இல்லங்களை தேடி பலர் வருகின்றனர்.

அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை முதல்வர் விரைவில் தொடங்கி வைப்பார். மாணவியருக்கு உயர்கல்வி உறுதித்தொகை ₹1000 வழங்குவதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளது. முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு கல்லூரி திறக்கப்பட்டவுடன் உறுதித் தொகை நேரடியாக மாணவியரின் வங்கிக் கணக்குக்கு செலுத்தப்படும். முதியோர் உதவித் தொகை வழங்கும் பணி இனி விரைவு படுத்தப்படும், தாமதம் இருக்காது.

காலை சிற்றுண்டி திட்டத்துக்கான பூர்வாங்க பணிகள் நடந்துவருகிறது. விரைவில் திட்டம் தொடங்கப்படும். பள்ளி மாணவர்களுக்கான சீருடைகள் தைக்கும் பணியும் நடக்கிறது. விரைவில் அவற்றை வழங்குவோம். 18 வயதை கடந்த சிலர் காதல் திருமணம் செய்வதும் குழந்தை திருமணம் என்றுதான் கருதப்படும். அதை தடுக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் நிலைமை மாறும், காதல் திருமண எண்ணிக்கை குறையும்.

சத்துணவு முட்டை டெண்டரில் கிறிஸ்டி நிறுவனம் முறைகேட்டில் ஈடுபட்டதற்கான தரவுகள், புகார்கள் ஏதும் அரசிடம் இல்லை. தொடர்ந்து டெண்டர் கோரும் நிறுவனங்கள் பட்டியலில் கிறிஸ்டி நிறுவனம் உள்ளது. விலைப் பட்டியலைப் பொறுத்து டெண்டர் ஒதுக்கப்படும். சத்துணவு பணியாளர் நியமனம் வெளிப்படைத் தன்மையுடன் நடக்கும். அரசுப் பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி நடத்துவது குறித்து தெளிவான விளக்கத்தை கல்வித்துறை கொடுத்துவிட்டது. சமூக நலத்துறை சார்பில் எல்கேஜி, யுகேஜி நடத்தவில்லை. இவ்வாறு கீதாஜீவன் தெரிவித்தார்.

ஆசிரியர் பயிற்சி தேர்வுக்கு தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜூன் 16: தொடக்க கல்வி பட்டயத் தேர்வு என்னும் ஆசிரியர் பயிற்சி தேர்வு ஆகஸ்ட் மாதம் நடக்க உள்ளது. இந்த தேர்வை தனித்தேர்வர்களாக எழுத விரும்புவோர் www.dge.tn.gov.in என்ற இணைய தளத்தின் மூலம் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பலாம். அதனுடன் ஏற்கனவே தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற மதிப்பெண் சான்றுகளையும் இணைத்து அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் மூலம் 28ம் தேதி முதல் ஜூலை 7ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். தேர்வுக் கட்டணமாக ஒவ்வொரு பாடத்துக்கும் ரூ.50, மதிப்பெண் சான்று (முதலாம் ஆண்டு) ரூ.100, இரண்டாம் ஆண்டு மதிப்பெண் சான்று ரூ.100, பதிவு மற்றும் சேவைக் கட்டணம் ரூ.15, ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ.50 செலுத்த வேண்டும்.

மேற்கண்ட தேதிகளில் விண்ணப்பிக்க தவறும் நபர்கள் சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் ஜூலை 8ம் தேதி முதல் 9ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். இதற்கான கட்டணமாக ரூ.1000 செலுத்த வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நாமக்கல் காந்தியவாதி மனு தாக்கல்

சேந்தமங்கலம், ஜூன் 16: ஜனாதிபதி தேர்தல், அடுத்த மாதம் 18ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது. நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம் ஒன்றியம் செல்லம்பட்டி ஊராட்சி மேற்கு பாலப்பட்டியை சேர்ந்த காந்தியவாதி ரமேஷ். இவர் அகிம்சா சோசியலிஸ்ட் கட்சி நிறுவனத் தலைவராகவும், யோகா மாஸ்டராகவும் உள்ளார். இவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பொருட்டு, டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள ஜனாதிபதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் நேற்று மதியம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

NAVODAYA VIDYALAYA SAMITI
(An autonomous organization of Ministry of Education, Govt. of India)
Regional Office, Hyderabad

NOTIFICATION
Engagement of Counsellors on contract basis for the session 2022-23

Navodaya Vidyalaya Samiti intends to engage Counsellors on contract basis in Jawahar Navodaya Vidyalayas residential co-educational schools having classes VI to XII. Online applications are invited from the eligible candidates for contract engagement for the academic session 2022-23. For detailed notification please visit NVS RO Hyderabad website https://navodaya.gov.in/nvs/ro/Hyderabad/en/home/

Remuneration:
Monthly consolidated remuneration of Rs.44,900/-
Essential Qualification

(a) Educational Qualification-
1. Master's degree (M.A./M.Sc.) in Psychology from a recognized university or institution.
and
2. One year Diploma in guidance & counseling from a recognized university or institution

(b) Experience
At least one year experience in Guidance & Counselling / Counselling in educational institutes of Central or State or UT Government / Autonomous Bodies of Central or State Government / Public Sector Undertaking.

Age:
Above 28 years and below 50 years as **1st June 2022**
Application Fee: Non refundable application Fee @ Rs.500/- per candidate will be charged. However, SC /ST and PH candidates are exempted.

Last date for online application:
Online applications may be submitted by visiting the website of NVS Regional Office, Hyderabad: https://navodaya.gov.in.nvs/ro/Hyderabad/en/home from 16th June 2022 to 25th June 2022.

NVS may reject candidature if it is found that candidate has applied for more than one Regions, even after engagement.

Note: Only shortlisted candidates will be called for Personal Talk.

Date: 16.06.2022
DEPUTY COMMISSIONER

யா ஷஹீது
முராதுஹாஸில்

ஏர்வாடி தர்ஹா ஷரீஃப்
சந்தனக்கூடு விழா அழைப்பிதழ்

23.06.2022 வியாழன் மாலை 4 மணியளவில் சந்தனக்கூடு விழா
24.06.2022 வெள்ளி காலை 4 மணியளவில் பாதுஷா நாயகம் புனித ரவுலா ஷரீஃபிற்கு சந்தனம் பூசுதல்.
30.06.2022 வியாழன் மாலை 4.45 மணியளவில் கொடி இறக்கம் மற்றும் அன்னதானம்.

அழைப்பின் மகிழ்வில்...
ஏர்வாடி தர்ஹா ஹக்தார் நிர்வாக சபை.
ஏர்வாடி தர்ஹா.
இராமநாதபுரம் மாவட்டம்.

1.19 லட்சம் ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு அமர்வுப்படி உயர்வு

அரசு ஆணை வெளியீடு

நெல்லை, ஜூன் 16: தமிழக ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அமுதா பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் மாவட்ட ஊராட்சிமற்றும்ஊராட்சி ஒன்றிய பிரதிநிதிகளுக்கு கூட்டங்களில் கலந்து கொள்ளும்நாட்களில்அமர்வுப்படித் தொகை 10 மடங்காகவும்,கிராமஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு ஐந்து மடங்காகவும் அமர்வுப்படித்தொகைஉயர்த்திவழங்கப்படும் என தமிழக முதல்வர் 110 விதியின் கீழ் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

தமிழகத்தில் மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளான மாவட்ட ஊராட்சி தலைவர், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், உறுப்பினர்கள்,கிராமஊராட்சிதலைவர், உறுப்பினர்களுக்கு அமர்வுப்படி வழங்கி கடந்த 1997ம் ஆண்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பின்னர் 2012ம் ஆண்டு கிராம ஊராட்சி தலைவர், கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு மட்டும் அமர்வுப்படி உயர்த்தி வழங்கப்பட்டது. மற்ற உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு உயர்த்தப்படவில்லை. எனவே பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த அமர்வுப்படியை உயர்த்தி வழங்கக்கோரி வரப்பெற்ற கோரிக்கைஅடிப்படையில் தற்போது வழங்கப்படும் அமர்வுப்படியில் இருந்து மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பிரதிநிதிகளுக்குகூட்டங்களில் கலந்து கொள்ளும் நாட்களில் மாதம் ஒன்றுக்கு ஒரு முறை மட்டும் அமர்வுப்படி தொகை 10 மடங்காக உயர்த்தி வழங்கவும்,கிராம ஊராட்சி தலைவர், உறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றுக்கு மட்டும் அமர்வுப்படி தொகையைஐந்துமடங்குகளாக உயர்த்தி வழங்கவும், இவ்வாறு வழங்குவதன் மூலம் தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சி தலைவர்கள், 99 ஆயிரத்து 327 கிராம ஊராட்சி உறுப்பினர்கள், 388 ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், 6 ஆயிரத்து 471ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள்,36மாவட்ட ஊராட்சி தலைவர்கள்,655 மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட 1.19 லட்சம் ஊரக ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் பயன்பெறுவர் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். அதன்படி அமர்வுப்படியை உயர்த்தி வழங்கிட அனுமதித்து அரசு ஆணையிடுகிறது. ஒவ்வொரு பதவிக்கும் உயர்த்தப்பட்டுள்ள அமர்வுப்படி வருமாறு (முந்தைய அமர்வுப்படி அடைப்புக்குறிக்குள்): கிராம ஊராட்சி தலைவர் - ரூ.500 (100), கிராம ஊராட்சி உறுப்பினர் - ரூ.250 (50), ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் - ரூ.750 (75), ஊராட்சிஒன்றியக்குழு உறுப்பினர் - ரூ.500 (50), மாவட்ட ஊராட்சி தலைவர் - ரூ.1000 (100), மாவட்ட ஊராட்சி உறுப்பினர் - ரூ.1000 (100). ஒரு மாதத்தில் பலகூட்டங்கள்நடத்தப்பட்டாலும், மாதம் ஒன்றுக்கு ஒரு அமர்வுப்படியே வழங்கப்படும். இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில்

பயன்பாட்டில் இல்லாத 20.56 கிலோ நகைகள் தங்கக்கட்டிகளாக மாற்றம்

₹10 கோடியில் தங்க முதலீட்டு பத்திரம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, ஜூன் 16: கடந்த 10 ஆண்டுகளாக கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களில், கோயிலுக்கு தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, ஏனைய இனங்களை மும்பையில் உள்ள ஒன்றிய அரசுக்கு சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சொக்கத் தங்கமாக மாற்றி, கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வட்டி மூலமாக கோயில்களின் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், இப்பணிகளை கண்காணிப்பதற்கு மூன்று மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஓய்வு பெற்ற நீதிபதிகள் தலைமையிலான குழுக்கள் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் இந்து சமய அறநிலையத்துறையின் 2021-22ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கோயில்களில் எந்த விதத்திலும் பயன்படுத்தப்படாமல் இருப்பில் உள்ள பலமாற்று பொன் இனங்களை உருக்கி சுத்த தங்கக்கட்டிகளாக பெற்று வங்கியில் முதலீடு செய்தல் பணிக்காக தமிழகத்தில் சென்னை பகுதி, திருச்சி பகுதி மற்றும் மதுரை பகுதி ஆகிய மூன்று பகுதிகளில் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் தனிக்குழுக்கள் அமைத்து 9.9.2021 அன்று அரசாணை வெளிடப்பட்டது.

அதன்படி, சென்னை மண்டலம் - திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் கோயிலில் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி துரைசாமி ராஜு தலைமையிலும், திருச்சி மண்டலம் சமயபுரம் மாரியம்மன் கோயிலில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ரவிச்சந்திர பாபு தலைமையிலும், மதுரை மண்டலம் - இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். மாலா தலைமையிலும், குழுக்கள் அமைக்கப்பட்டு, இத்திட்டம் 13.10.2021ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலினால் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, விருதுநகர் இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில் உள்ள பயன்பாட்டில் இல்லாத பலமாற்று பொன் இனங்கள் பிரித்து எடுக்கும் பணி ஆணையர் உத்தரவின்படி, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.மாலா முன்னிலையில் 13.10.2021, 18.10.2021, 19.10.2021, 20.10.2021 ஆகிய நாட்களில் பொன் இனங்களில் உள்ள அரக்கு, கற்கள் மற்றும் இதர உலோகங்கள் நீக்கப்பட்டு பலமாற்று பொன் இனங்கள் மட்டும் பிரித்தெடுக்கப்பட்டன.

நீதிபதி தலைமையில் பிரித்தெடுக்கும் பணி முடிக்கப்பட்டு. 27250.500 கிராம் எடையுள்ள பலமாற்றுப்பொன் இனங்கள் 1.4.2022 அன்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஆகியோர் முன்னிலையில் மும்பையில் உள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான உருக்காலைக்கு எடுத்துச் சென்று, அதனை உருக்கி சுத்த தங்கக்கட்டிகளாக மாற்றும்பொருட்டு சாத்தூர் கிளை பாரத ஸ்டேட் வங்கி மேலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட பொன் இனங்கள் 18.4.2022 அன்று மும்பையில் உள்ள ஒன்றிய அரசுக்கு சொந்தமான மிண்ட் தங்க உருக்காலை நிறுவனத்தில் வங்கி அதிகாரிகள் மற்றும் நீதியரசர்கள் தலைமையிலான குழுவின் முன்னிலையில் மீண்டும் எடை பார்க்கப்பட்டதில் வாஸ்தவ எடையான 27252.600 கிராம், பலமாற்று பொன் இனங்கள் உருக்கப்பட்டு 20567.892 கிராம் சுத்த தங்கக்கட்டிகளாக மாற்றி மும்பை எஸ்பிஐ கிளையில் கடந்த 29.4.2022 அன்று நிரந்தர முதலீடு செய்யப்பட்டது. அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட சுத்த தங்கக்கட்டிகளின் மதிப்பு ரூ.10 கோடி. இதன் மூலம் ஆண்டிற்கு இருபத்தி நான்கு லட்சம் ரூபாய் வட்டித்தொகையாக பெறப்பட்டு கோயில் கணக்கில் வரவு வைக்கப்பட உள்ளது.

இந்த தங்க முதலீட்டுப் பத்திரத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் இருக்கன்குடி, மாரியம்மன் கோயில் நிர்வாகிகளிடம் ஒப்படைத்தார்.

பொன் இனங்கள் பிரித்தெடுக்கும் பணிகள் முழுவதும் நீதிபகள், பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் முன்னிலையில் நடந்தன. மேலும், இந்த பணிகள் அனைத்தும் வீடியோ பதிவுகள் செய்யப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்ட பொன் இனங்கள் அனைத்தும் பாரத ஸ்டேட் வங்கியிடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டது.

கோயிலில் எத்தகைய பயன்பாடுமின்றி, முடங்கிகிடந்த பொன் இனங்களை சுத்த தங்கக்கட்டிகளாக மாற்றி முதலீடு செய்வதன் மூலம் கோயில் வருவாயைப் பெருக்குவதுடன் பக்தர்கள் வழங்கும் காணிக்கைகளுக்கு சிறந்த பாதுகாப்பாகவும் விளங்குகிறது. இந்த முதலீட்டின் மூலம் பெறப்படும் வட்டித் தொகை அந்தந்த கோயிலின் திருப்பணிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும்.

இந்நிகழ்ச்சியில், அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, செயலாளர் சந்தரமோகன், ஆணையர் குமரகுருபரன், கூடுதல் ஆணையர் கண்ணன் உள்பட உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

ICICI Home Finance

கார்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை-400059, இந்தியா
கிளை அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், லயன் ஆர்கேட், 1A, முதல் தளம், மதுரை சாலை, மேலத்தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி-627001

[விதி 8(6) விதிகளை காண்க]
அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதியுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலத் தேதி & நேரம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1.	கதிரேசன் M (கடன்தாரர்) வேல்விழி K (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTUN00000848897	கதவு எண் 6/518, தாளமுத்து நகர், மாப்பிளையூரணி கிராமம் மற்றும் ஊராட்சி, தூத்துக்குடி மாவட்டம்-628201.	₹23,40,221/- (7 ஜூன், 2022 தேதியன்று)	₹ 17,98,837/- ₹ 1,79,884/-	28 ஜூன், 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	30 ஜூன், 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை ஆக்சன் டைகர் இணையதளத்தில் (URL இணைப்பு- https://sarfaesi.auctiontiger.net/EPROC/) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் **29 ஜூன், 2022 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், லயன் ஆர்கேட், 1A, முதல் தளம், மதுரை சாலை, மேலத்தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி-627001** இடத்தில் **29 ஜூன், 2022 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட காலத்தின்படி தங்கள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை எனில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதியானது **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், லயன் ஆர்கேட், 1A, முதல் தளம், மதுரை சாலை, மேலத்தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி-627001** இடத்தில் **29 ஜூன், 2022 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **திருநெல்வேலியில்** மாற்றத்தக்க வகையில் **"ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்-ஏலம்"** என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடை 7021072869** இல் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, **காண்க https://www.icicihfc.com/**

நாள்: ஜூன் 16, 2022
இடம்: மாப்பிள்ளையூரணி/ தூத்துக்குடி

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்